ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2167/19 - 2020 මාර්තු මස 21 වැනි සෙනසුරාදා - 2020.03.21

*2167/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*24 (3) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

(i) *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் 2167/12 ஆம் இலக்க 2020, மாச்சு 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தேர்தல் மாவட்டங்கள் ஒவ்வொன்றினதும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு 2020, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 7.00 மணிக்கு ஆரம்பித்து பி. ப. 4.00 மணி வரை நடைபெறுமென கட்டளையிடப்பட்டுள்ள போதிலும், இலங்கை நாட்டினுள் பரவியுள்ள* COVID - *19 ஆபத்தான நிலைமை காரணமாக, கீழே காணப்படும் அட்டவணையிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் வாக்கெடுப்பை 2020, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நடாத்த முடியாதுள்ளதென, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 (3) ஆம் பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்புத் தினம் 2020, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியின் பின்னரான பதினான்கு நாட்களுக்குப் பின்னொரு தினம் விதிக்கப்படுமெனவும், அத்திகதி பின்னர் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்தப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, மாச்சு 21.

1A - PG 4956 — 267 (2020/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

தேர்தல் மாவட்டத்தின் இலக்கமும் பெயரும்

1. கொழும்பு
2. கம்பஹா
3. களுத்துறை
4. மஹநுவர
5. மாத்தளை
6. நுவரெலியா
7. காலி
8. மாத்தறை
9. அம்பாந்தோட்டை
10. யாழ்ப்பாணம்
11. வன்னி
12. மட்டக்களப்பு
13. திகாமடுல்ல
14. திருகோணமலை
15. குருநாகல்
16. புத்தளம்
17. அநுராதபுரம்
18. பொலன்னறுவை
19. பதுளை
20. மொணராகலை
21. இரத்தினபுரி
22. கேகாலை

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.